பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி-சென்னை-4
12 10 2025 SUNDAY 7 15 AM

ஆகாஷவாணி – செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சமூக மேம்பாட்டிற்கு கல்வி முக்கிய பங்காற்றுவதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரெளபதி முர்மு கூறியுள்ளார்.

2. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பாதுகாப்புடன் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மற்றும் தேர்வுக் கட்டணங்களை டிஜிட்டல் முறையில் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை மத்திய கல்வி அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

4. சூடானில் புலம்பெயர்ந்தோர் முகாமில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் 60 பேர் உயிரிழந்தனர்.

5. சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Darrshan Suresh – Adtiya Vishal இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

> > > > > > < < < < <

சமூக மேம்பாட்டிற்கு கல்வி முக்கிய பங்காற்றுவதாக குடியரசுத் தலைவர் திருமதி. திரெளபதி முர்மு கூறியுள்ளார்.

அஹமதாபாதில் குஜராத் வித்யாபீட கல்வி நிறுவனத்தின் 71வது பட்டமளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், இந்தியாவை சுயசார்பு நாடாக உருவாக்குவதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

உள்நாட்டு தயாரிப்புகளை வாங்குவதில் மாணவர்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

சவால்களை எதிர்கொள்ளும் வகையில், மாணவர்கள் தங்களது திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் குடியரசுத்தலைவர் வலியுறுத்தினார்.

> > > > > > < < < < <

ஆந்திரப்பிரதேச முதலமைச்சராக 15 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள அம்மாநில முதலமைச்சர் திரு சந்திரபாபு நாயுடுவுக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், எதிர்காலம் தொடர்பான அவரது தொலைநோக்குப் பார்வையும், சிறந்த நிர்வாகத்திற்கான உறுதியான செயல்பாடுகளும் போற்றத்தக்கது என்று கூறியுள்ளார்.

குஜராத் மாநில முதலமைச்சராக தாம் பொறுப்பு வகித்த காலத்திலிருந்து திரு. சந்திரபாபு நாயுடுவுடன் பணியாற்றியுள்ளதையும் பிரதமர் நினைவுகூர்ந்துள்ளார்.

ஆந்திரப்பிரதேச மாநிலத்தின் முன்னேற்றத்திற்காக அவரது பணிகள் சிறப்பாக அமைய வாழ்த்துவதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

> > > > > > < < < < <

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பாதுகாப்புடனும் பொறுப்புடனும் பயன்படுத்தப்படுவது உறுதி செய்யப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு உகந்த சூழல் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் ஏராளமான திறன்வாய்ந்த இளைஞர்கள் உள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, புதுதில்லியில் Anthropic நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி திரு. Dario Amodei, திரு. அஷ்வினி வைஷ்ணவ் சந்தித்து பேசினார்.

> > > > > > < < < < <

பள்ளிகளில் மாணவர் சேர்க்கை மற்றும் தேர்வுக் கட்டணங்களை டிஜிட்டல் முறையில் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை மத்திய கல்வி அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில், பள்ளிகளில் நிதி பரிவர்த்தனை தொடர்பான செயல்பாடுகளை நவீனமயமாக்கும் வகையில், UPI செயலியை பயன்படுத்த முன்வருமாறு கேட்டுக் கொண்டுள்ளது.

வெளிப்படைத்தன்மையுடன் கூடிய டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகள் கட்டணங்களை எளிதாக செலுத்த வழிவகுக்கும் என்று அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

> > > > > > < < < < <

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி தேசிய ஜனநாயகக் கூட்டணி மற்றும் எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளுக்கிடையே தொகுதி பங்கீடு குறித்த பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

இது தொடர்பாக பிஜேபி உயர்நிலைக் குழுக் கூட்டம் புதுதில்லியில் உள்ள அக்கட்சியின் தலைவர் திரு ஜே பி நட்டாவின் இல்லத்தில் நேற்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அக்கட்சியின் மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா மற்றும் மூத்த தலைவர்கள் கலந்து கொண்டனர்.

பீகார் மாநிலத்தில் உள்ள தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சிகளிடையே தொகுதிகளை பங்கீடு செய்வது குறித்தும், போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்கள் குறித்தும், விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில், எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளும் தொகுதி பங்கீடு குறித்த ஆலோசனையில் ஈடுபட்டன.

சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை இறுதி செய்வதற்காக ராஷ்ட்ரிய ஜனதா தளம் ஆலோசனை நடத்தியது.

திரு லாலு பிரசாத் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கட்சியின் மூத்த தலைவர்கள் பங்கேற்றனர்.

பாட்னாவில் காங்கிரஸ், அக்கட்சியின் மூத்த நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தியது.

> > > > > > < < < < <

மேற்குவங்க மாநிலம் துர்காபூரில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி கூட்டுப் பாலியல் வன்கொடுமை சம்பவம் குறித்து அம்மாநில முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி அறிக்கை அளிக்க வேண்டும் என்று அம்மாநில பிஜேபி கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட போதிலும், இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்று அம்மாநில சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் திரு சுவேந்து அதிகாரி தெரிவித்துள்ளார்.

> > > > > > < < < < <

தில்லி அரசு மருத்துவமனைகளில் 90 சதவீத மருந்துகள் கையிருப்பில் உள்ளதாகவும், வென்டிலேட்டர் வசதியுடன் கூடிய படுக்கைகள் செயல்பாட்டில் உள்ளதாகவும் முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்துள்ளார்.

தில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மருந்துகள், மருத்துவ உபகரணங்கள், ஊழியர்கள் மற்றும் மருத்துவமனை உள்கட்டமைப்பு வசதிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் இதுகுறித்து விரிவாக விவாதிக்கபட்டதாக கூறினார்.

மருத்துவமனைகளுக்குத் தேவையான புதிய உபகரணங்கள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை அரசு வழங்கி வருவதாகவும் திருமதி ரேகா குப்தா தெரிவித்தார்.

> > > > > > < < < < <

கனடா வெளியுறவு அமைச்சர் திருமதி. அனிதா ஆனந்த் இன்று இந்தியா வருகிறார்.

அவரது இந்தப் பயணத்தின் போது இருதரப்பு உறவுகள் மற்றும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து வெளியுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். ஜெய்சங்கர், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இந்த பேச்சுவார்த்தையின் போது, வர்த்தகம், எரிசக்தி, மற்றும் பாதுகாப்பு போன்ற துறைகளில் இணைந்து செயல்படுவது குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

> > > > > > < < < < <

தீ விபத்துகளில் இருந்து உயிர்களையும், உடமைகளையும் பாதுகாத்துக் கொள்வது குறித்த ஒத்திகை நிகழ்ச்சி தமிழக தீயணைப்புத் துறை சார்பில் நாமக்கல்லில் நடைபெற்றது.

தீ விபத்து ஏற்படும் தருணங்களில் தற்காத்துக் கொள்வது குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் இந்த ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டதாக நாமக்கல் மாவட்ட தீயணைப்புத் துறை துணை இயக்குநர் திரு. கல்யாணசுந்தரம் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் – கண்ணன் 40 செகண்ட்ஸ்)

> > > > > > < < < < <

*சபரிமலை ஐயப்பன் கோயிலில் ரோப்வே திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பாக அக்கோயிலைச் சுற்றியுள்ள மலைப் பகுதிகளில் மத்தியக் குழு நேற்று ஆய்வு செய்தது.*

*இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து மத்திய சுற்றுச்சூழல், வனம்,பருவநிலை மாற்ற அமைச்சகம் ஆகியவற்றின் அதிகாரிகள் அடங்கிய மத்திய குழு நேரிடையாக சென்று மதிப்பாய்வு செய்தது.*

*இந்த ரோப்வே திட்டத்தை செயல்படுத்துவதால் சுற்றுச்சூழல் மற்றும் இதர பாதிப்புகள் குறித்து இக்குழு மதிப்பீடு செய்து வருகிறது.*

*இது தரைத்தளத்திலிருந்து மலைக்கோயிலுடன் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

*இந்த ஆய்வின் போது கேரளா மாநிலத்தைச் சேர்ந்த வனத்துறை மற்றும் தேவஸ்தான அதிகாரிகள் அடங்கிய குழுவும் சென்றது.*

> > > > > > < < < < <

*சூடானின் எல்ஃபாஷரில் உள்ள புலம்பெயர்ந்தோர் முகாமில் நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலில் 60 பேர் உயிரிழந்தனர்.*

*இந்த தாக்குதலுக்கு எதிராக அந்நாட்டுத் துணை ராணுவ அதிரடிப் படை அங்குள்ள பல்கலைக்கழக வளாகத்திற்குள் அமைந்துள்ள முகாம் மீது இரண்டு ட்ரோன் மற்றும் எட்டு பீரங்கி குண்டுகள் மூலம் தாக்குதல் நடத்தியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*துணை ராணுவ அதிரடிப்படை மற்றும் அந்நாட்டு ராணுவத்திற்கு இடையே மோதல் ஏற்பட்டுள்ள நிலையில், அப்பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.*

> > > > > > < < < < <

*Rwanda-வில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Darrshan Suresh – Adtiya Vishal இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை 7-6, 1-6, 10-6 என்ற செட்கணக்கில் நெதர்லாந்தின் Max Houkes – Colin Van Beem இணையை வென்றது.*

*>>>>>><<<<<*

*15 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Ankolika பட்டம் வென்றார்.*

> > > > > > < < < < <

உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

விசாகப்பட்டினத்தில் நடைபெறும் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்குத் தொடங்குகிறது.

> > > > > > < < < < <

புரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் பெங்களூரு - ஜெய்ப்பூர் அணியையும், புனே – தமிழக அணியையும் வென்றன.

> > > > > > < < < < <